தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க. எண். 34462 / பிடி1 / இ1 / 2020, நாள். 10.06.2021

-----

பொருள் : பள்ளிக் கல்வி – 2020–21ஆம் கல்வியாண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து - மாணவர்களுக்கு இறுதி மதிப்பெண் வழங்குதல் - குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது - வரிசை எண். 8 முதல் 10 முடிய - உறுப்பினர்களை தெரிவு செய்து வழங்குதல் - சார்ந்து.

பார்வை : 1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து) நாள்.05.06.2021.

2. சென்னை–6, பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.34462/பிடி1/இ1/2020, நாள்.07.06.2021.

3. அரசாணை(1டி) எண்.76 பள்ளிக் கல்வித்(அ.தே) துறை, நாள்.10.06.2021

.......

பார்வை 1–ல் காணும் அறிவிப்பின்படி 2020–21 ஆம் கல்வியாண்டில் பயின்ற பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படுகிறது என்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண்கள் குறித்து குழு அமைக்கப்படும் என்றும் அதன் அடிப்படையில் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில் குழு அமைப்பதற்கான உறுப்பினர்களை நியமித்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொள்ளப்பட்டது.

பார்வை 3–ல் காணும் அரசாணையில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இறுதி மதிப்பெண்கள் வழங்குவது சார்ந்து குழு அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அவ்அரசாணையில் 8 முதல் 10 முடிய உள்ள உறுப்பினர்களை தேர்வு செய்ய பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட தலைமை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

| வரிசை எண். | தேர்வு செய்யப்படும் தலைமை ஆசிரியர்கள்(உறுப்பினர்கள்) | உறுப்பினர்களின் முகவரி |
|---|---|---|
| 1 | தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி | திருமதி.A.ஸ்டெல்லாஅமலோர்பவ மேரி, தலைமை ஆசிரியை, ஜெய்வாபாய் மாதிரி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்–641 601.<br>அலைப்பேசி எண்–9486791836<br>Mail id– stellafelixa@gmail.com |
| 2 | தலைமை ஆசிரியர், உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி | திரு.U.கணேசன், தலைமை ஆசிரியர், சங்கர் உதவிபெறும் மேல்நிலைப்பள்ளி, சங்கர்நகர், திருநெல்வேலி.<br>அலைப்பேசி எண்.948617660,0462–2300359<br>Mail id–sankarsn1957@gmail.com, ughm2008@gmail.com |
| 3 | தலைமை ஆசிரியர், சுயநிதி பள்ளி | திரு.H.ஜேம்ஸ்சத்தியராஜ்,முதல்வர், செயின்ட் ஜான்ஸ்மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆழ்வார்திருநகர், சென்னை–87.<br>அலைப்பேசி எண்.9841095912<br>Mail id–johns@gmail.com |

மேற்கண்ட தலைமை ஆசிரியர்கள் இப்பொருள் குறித்து மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்கும் விஷயத்தில் ஆக்கப்பூர்வமான ஆவணங்களின் அடிப்படையில் எந்த அளவிற்கு மந்தனமாக முறையில் நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும் என்ற விவரங்களுடன் தயார்நிலையில் இருக்குமாறும் தெரிவிக்கப்படுகிறார்கள். குழுவின் தலைவரால் வழங்கப்படும் பணிகளை உடனுக்குடன் மேற்கொண்டு அவ்வபோது நடைபெறும் ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்று தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

10/6/21

பள்ளிக் கல்வி ஆணையர்

பெறுநர்

1. திருமதி.A.ஸ்டெல்லாஅமலோர்பவ மேரி,
   தலைமை ஆசிரியை, ஜெய்வாபாய் மாதிரி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்–641 601.
2. திரு.U.கணேசன் , தலைமை ஆசிரியர்,
   சங்கர் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, சங்கர் நகர், திருநெல்வேலி.

3. திரு.H.ஜேம்ஸ்சத்தியராஜ், முதல்வர்,
செயின்ட் ஜார்ஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஆழ்வார் திருநகர்,
சென்னை–87.
(வழி முதன்மைக் கல்வி அலுவலர் மூலம்)

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9,
(அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.)
2. மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
3. சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

பள்ளிக்கல்வி – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தமிழகத்தில் கொரோனா பெருந்தொற்று காரணமாக மாணவர்களின் நலன்கருதி, 2020–21–ஆம் கல்வியாண்டில் பயின்ற பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு ரத்து – மாணவர்களுக்கு இறுதி மதிப்பெண்கள் வழங்குதல் – குழு அமைத்து – ஆணை வெளியிடப்படுகிறது

---

<u>பள்ளிக்கல்வித் (அ.தே.) துறை</u>

அரசாணை (1டி) எண்.76

நாள் 10.06.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், வைகாசி–27

படிக்கப்பட்டவை:–

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 05.06.2021–ம் நாளிட்ட அறிவிப்பு.
2. பள்ளிக் கல்வித் துறை ஆணையர் அவர்களின் கடித ந.க. எண்.34462/பிடி1/இ1/2021 நாள் 07.06.2021

-------

<u>ஆணை:-</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அறிவிப்பில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் கொரோனா பெருந்தொற்று காரணமாக மாணவர்களின் நலன்கருதி 2020–21–ஆம் கல்வியாண்டில் பயின்ற பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மேலும் மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவதற்காக குழு ஒன்று அமைத்து, இது குறித்து ஆய்வு செய்து வழங்கவுள்ள அறிக்கையின் அடிப்படையில், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இறுதித்தேர்வு மதிப்பெண்கள் வழங்கப்படும் எனவும், அவ்வாறு வழங்கப்படும் மதிப்பெண்களைக் கொண்டு மட்டுமே, தமிழகத்திலுள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் சேர்க்கை நடைபெறும் எனவும் அறிவித்துள்ளார்.

2. அதனடிப்படையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வித் துறை ஆணையர், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவது குறித்து முடிவு செய்ய ஏதுவாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைப்பதற்கும், அக்குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமையாசிரியர்களை முடிவு செய்ய அனுமதியும் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1 | அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை | தலைவர் |
| 2 | அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை | உறுப்பினர் |
| 3 | சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் | உறுப்பினர் |
| 4 | பள்ளிக்கல்வி ஆணையர் | உறுப்பினர் |
| 5 | இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் | உறுப்பினர் |
| 6 | இயக்குநர், மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 7 | இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம் | உறுப்பினர் |
| 8 | தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி | உறுப்பினர் |
| 9 | தலைமையாசிரியர், உதவிபெறும் மேல்நிலைப்பள்ளி | உறுப்பினர் |
| 10 | தலைமையாசிரியர், சுயநிதிப்பள்ளி | உறுப்பினர் |

இடம் பெற்றுள்ள தலைமையாசிரியர்களை முடிவு செய்து கொள்ள பள்ளிக்கல்வித் துறை ஆணையர் அவர்களுக்கு அனுமதியும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர், சென்னை–5.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
தனிச் செயலாளர், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10-6-2021.
பிரிவு அலுவலர்